## DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| **Case No** | : CC No.468/2019 | **Date** | : 12.06.2025 |
| **Deposition of Witness for** | : அ.சா.4 | **Taluk** | : |
| **Name** | : பாலசுப்பிரமணி | **Calling** | : |
| **Father Name** | : குருசாமி | **Religion** | : |
| **Village** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 12.06.2025**

(எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் மரவப்பாளையத்தில் குடியிருந்து கொண்டு சோழமண்டல நிதி நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எதிரி மனோவை எனக்குத் தெரியும். அவர் எங்களது பகுதியில் குடியிருந்து வந்தார். **அ.சா.1** தினேஷ்குமார் மற்றும் **அ.சா.2** ஆறுமுகம் ஆகியோர்களை எனக்குத் தெரியும். அவர்கள் எனது மாமா ஆவார்கள். கடந்த 02.05.2017ம் தேதி அன்று இரவு சுமார் 07.30 மணியளவில் எங்கள் ஊரில் மைக்கேல் மளிகைக்கடை அருகில் நான் பைக்கில் வந்துகொண்டிருந்தபோது எதிரி மனோ அ.சா.1-வுடன் மளிகைக்கடைக்கு முன்பாக தகராறில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார் அப்போது எதிரி தனது கையில் வைத்திருந்த கத்தியால் தினேஷ்குமாரை குத்தவரும்போது அதனை அவர் தடுத்தார். அப்போது அந்த கத்தி தினேஷ்குமாரின் வலது முழங்கை அருகே பட்டது. அந்த கத்தி அவரது இடதுபக்க இடுப்பிலும் பட்டது. அந்த கத்தியை பார்த்தால் தற்போது

என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் கத்திதான் **(அ.சா.பொ.1)** எதிரி மனோ வைத்திருந்தாரா என்று என்னால் உறுதியாக கூறமுடியவில்லை. ஆனால் அது மடக்குக்கத்திதான். அதில் அவருக்கு இரத்த காயம் ஏற்பட்டது. எதிரி உடனடியாக கத்தியை சாக்கடையில் வீசி விட்டு அங்கிருந்து ஓடிவிட்டார். அந்த சமயத்தில் ராஜீவ்காந்தி, குமார் தினேஷ்குமாரின் தந்தை ஆறுமுகம் மற்றும் கண்ணன் ஆகியோர்கள் அங்கு இருந்தோம். நாங்கள் அனைவரும் ஆம்புலன்ஸை வரவழைத்து அதில் சிகிச்சைக்காக தினேஷ்குமாரை அனுப்பி வைத்தோம். பின்னர் அவர் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளதாக தெரிந்துகொண்டேன். இந்த வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ இடத்திற்கு 10 நிமிடத்திற்குள் வந்து விட்டேனா என்றால் இல்லை சம்பவம் நடக்கும் போது அங்கு இருந்தேன். மைக்கேல் மளிகைக்கடைக்கு முன்பு சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை. தனபால், ஜெகநாதன், கணபதி ஆகியோர்களை தகராறு செய்ததாக தினேஷ்குமார் மீது சித்தோடு காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிரி மனோ சாட்சியாக உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. என்னுடன் இருந்ததாக சொல்லப்படும் ராஜீவ்காந்தி, கண்ணன், குமார் ஆகியோர்களை போலீஸார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்படி 3 பேரும் சம்பவத்தின்போது என்னுடன் இருந்தார்களா என்றால் ஆமாம்.

2. தினேஷ்குமார் தனியார் நிறுவனத்தில் பிட்டராக வேலைபார்த்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தில் வேலை செய்த போது ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி மனோ மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. போலீஸார் என்னை விசாரித்தபோது எதிரி மனோ மடக்குக்கத்தி வைத்திருந்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். உண்மையில் நான் சொல்வது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் நாங்கள் அனைவரும் அதனை தடுத்திருப்போம் என்றும், மேற்படி வழக்கில் மனோ சாட்சி சொல்ல வரக்கூடாது என்பதற்காக இந்த பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும்

அதில் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் சமயத்தில் சம்பவ இடத்தில் எதிரி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,

Erode.